# இயல் 7.3 - இயற்கணிதம்

பயிற்சி எண் :: 7.3.1.2.J

இயற்கணிதம் (Algebra) - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

## இயற்கணிதம் (Algebra) - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

அன்பரசு, செல்வம் மற்றும் பூபதி ஆகியோரின் தாயார், அவர்கள் ஒவ்வொருவரிடமும் ₹500 கொடுத்து பழங்கள் வாங்கிவரச் சொன்னார். அதில், அன்பரசிற்கு ஆப்பிள் பழம் மட்டுமே பிடிக்கும். எனவே, அவன் கிடைத்த பணத்தில் 20 ஆப்பிள் பழம் வாங்கிவந்தான். செல்வத்திற்கு பிரியமான பழங்கள், ஆப்பிள் மற்றும் மாம்பழம். எனவே, அவன் 10 மாம்பழங்களும் 12 ஆப்பிள் பழங்களும் வாங்கிவந்தான். பூபதிக்கு, கொய்யா, மா மற்றும் ஆப்பிள் ஆகிய மூன்று பழங்களும் பிடிக்கும். எனவே, அவன் 12 கொய்யாப்பழங்கள், 9 மாம்பழங்கள் மற்றும் 8 ஆப்பிள் பழங்கள் வாங்கிவந்தான். எனில், கொய்யா, மா மற்றும் ஆப்பிள் பழங்கள் ஆகியவை ஒவ்வொன்றின் விலை என்ன?

### அனுமானங்கள் (Assumptions)

(1) அவர்கள் யாவரும் பாக்கி எதுவும் கொண்டுவந்து தாயாரிடம் கொடுத்ததாகச் சொல்லப்படாததால் அவர்கள் எல்லோரும் அவர்களிடம் கொடுக்கப்பட்ட ₹500-கும் பழங்கள் வாங்கியதாகக் கொள்ளலாம்.

(2) கொய்யா,மா மற்றும் ஆப்பிள் பழங்களின் விலைகளை முறையே $x$, $y$ மற்றும் $z$ எனக்கொள்க.

$20z = 500$ — அன்பரசு வாங்கிய பழங்கள் ...... Eqn.①

$z = \frac{500}{20} = 25$ ...... Eqn.②

$10y + 12z = 500$ — செல்வம் வாங்கிய பழங்கள் ...... Eqn.③

$12x + 9y + 8z = 500$ — பூபதி வாங்கிய பழங்கள் ...... Eqn.④

ஆப்பிள் பழத்தின் $(z)$ மதிப்பை சமன்பாடு 2-லிருந்து சமன்பாடு 3-ல் மாற்றீடு செய்க . . .

$$10y + (12 \times 25) = 500$$

$$10y = 500 - 300 = 200$$

$$y = \frac{200}{10} = 20 \quad \text{...... Eqn.⑤}$$

ஆப்பிள் பழத்தின் $(z)$ மதிப்பையும் மற்றும் மாம்பழத்தின் $(y)$ மதிப்பையும் சமன்பாடு 4-ல் மாற்றீடு செய்க . . .

$$12x + (9 \times 20) + (8 \times 25) = 500$$

$$12x + 180 + 200 = 500$$

$$12x + 380 = 500$$

$$12x = 500 - 380$$

$$12x = 120$$

$$x = \frac{120}{12} = 10$$

கொய்யா,மா மற்றும் ஆப்பிள் பழங்களின் விலைகள் முறையே ₹10, ₹20 மற்றும் ₹25 ஆகும்.

## Information Rights & Disclaimers


Sum & solution prepared on Thursday 28th July, 2022 :: 05:34 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**